**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 12 April 2024

# தலைசிறந்த ஆசிய பல்கலைக்கழகப் பட்டியலில் சிங்கப்பூரின் இரண்டு பல்கலைக்கழகங்கள்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகமும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் ஆசிய அளவிலான உலகத் தரநிலையில் மீண்டும் தலைசிறந்த இடங்களைப் பெற்றுள்ளன.

பாடங்களின் அடிப்படையில் தேர்வுபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான உலகப் பல்கலைக்கழகங்களின் பட்டியல் ஏப்ரல் 10ஆம் தேதி வெளியிடப்பட்டது.

உலகளாவிய 1,500 பல்கலைக்கழகங்களுள் 408 ஆசியப் பல்கலைக்கழகங்கள் அந்தப் பட்டியலில் இடம்பிடித்தன.

முதல் 10 பாடத் திட்டங்களின் கணக்குப்படி சீனா, ஜப்பான், ஹாங்காங் பல்கலைக்கழகங்களைப் பின்னுக்குத் தள்ளி சிங்கப்பூரின் இரு பல்கலைக்கழகங்களும் முன்னேறின.

இதற்கு முன்னரும் இதேபோல தலைசிறந்த இடத்தை இவ்விரு பல்கலைக்கழகங்களும் பிடித்தன.

சிங்கப்பூர் சார்பாக சிறப்பான நிலையில் பிரதிநிதிக்கும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் 45 பாடத் திட்டங்களைக் கொண்டுள்ளது.

அவற்றில் 10 பாடத்திட்டங்கள் உலகத்தரம் வாய்ந்தவை. தகவல் தொடர்பு மற்றும் ஊடகக் கல்வி, ஆய்வு விஞ்ஞானம் மற்றும் மூன்று பொறியியல் படிப்புகள் அவற்றில் அடங்கும்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.